நாள் - 24.<u>11.2022</u>

**C.C. No**.106/2019

**அ.சா.1-ராஜேஷ்குமார் , த/பெ. ராமானுஜம்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 24 **day of November** 2022.

**குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எ.ம.சா.ஆ.1 ல் வெங்கிடுசாமியின் காட்டுபத்திரம், குண்டலபட்டி ராஜேஷ்குமார் அவர்களுடைய காட்டு பத்திரம் மற்றும் உயில் சாசனம் ஆகியவை சுதா வசம் உள்ளது என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1 ல் மேற்படி ஆவணங்களுடன் 20 காசோலைகளை சுதா வசம் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. காசோலைகளை கொடுக்காததால் எ.ம.சா.ஆ.1 ல் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. காசோலைகளை 10 அல்லது 11 வருடக்ஙகளாக நான் உபயோகித்து வருகிறேன். பங்கு சந்தையில் ஈடுபடுவதால் பரிவர்த்தனைகளை இணையதளத்தின் வாயிலாக செய்வேன் என்றால் சரியல்ல. என்னுடைய வங்கி கணக்கில் பணம் போட்டாலோ அல்லது எடுத்தாலோ என்னுடைய கைப்பேசிக்கு குறுந்தகவல் வரும் என்றால் சில சமயம் வரும் சில சமயம் வராது.

3. மனுதாரர் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தவுடன் எனக்கு தகவல் வரும் என்றால் சரிதான். உண்மையில் நான் காசோலையை சுதாவிற்கு கொடுத்திருந்தார் அக்காசோலையை மனுதாரரர் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டவுடனே மனுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சுதாவிற்கு கொடுத்ததால் நான் சுதாவை தான் கேட்டேன்.

4. நான் கோரியதன் படி 2 மாதம் கழித்து மனுதாரர் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபொழுதாவது மனுதாரருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சுதாவை தான் கேட்டேன். மனுதாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றாலும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றாலும் நான் காசோலை கொடுத்தவரிடம் தான் கேட்டேன்.

5. எ.ம.சா.ஆ.2 லும் காசோலை சுதா வசம் கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 20 காசோலைகளை கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். மேலும் எ.ம.சா.ஆ.2 ல் என்னுடைய தம்பி பத்திரம் மற்றும் 20 காசோலைகள் மற்றும் முத்திரைதாள்களை காங்கேயன் காண்பித்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எத்தனை காசோலையை

காண்பித்தார்கள் என்று எனக்கு தெரியாது. காசோலைகள் காங்கேயன் வசம் இருந்தது என்றால் சரியல்ல.

6. மேலும் எ.ம.சா.ஆ.2ல் 3ம் பக்கத்தில் ஸ்ரீநிவாசன் எனக்க எதிராக காசோலை வழக்கு தாக்கல் செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சுதாவிற்கு கொடுத்த காசோலையை பயன்படுத்தி அவர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரரிடம் பெற்ற பணத்திற்காக காசோலை வழங்கியதால் தான் அதில் சுதாவிற்கு கொடுத்தது என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேலும் மனுதாரரை யார் என்று தெரியாது என்றும் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் ஸ்ரீநிவாசனிடம் 3 லட்சம் பெறவில்லை என்று அதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

7. சுதாவிற்கு எதிராகவோ அல்லது மனுதாரருக்கு எதிராகவோ 02.09.2021 ம் தேதிக்கு முன்னர் எவ்வித நடவடிக்கையோ அல்லது புகாரோ அளிக்கவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 காவல் கண்காணிப்பளருக்கு அனுப்பட்டதற்கு ஆதரவாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் ஸ்ரீநிவாசனை யார் என்று தெரியாமல் இருந்திருந்தாலோ அவரிடம் பணம் எதுவும் பெறாமல் இருந்திருந்தாலோ அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக சுதாவிடம் இருந்து மனுதாரரர் காசோோலை பெற்று வழக்கு தாக்கல் செய்திருப்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலை தொகையை மனுதாரருககு கொடுக்க கடமைபட்டவர் என்றால் சரியல்ல.

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2022.11.24 18:30:01 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**